# இயல் 6.2
# விதைத் திருவிழா

## அ) வினாக்களுக்கு விடையளிக்க.

1. **மாணவர்களை எங்கே அழைத்துச் செல்வதாகத் தலைமையாசிரியர் கூறினார்?**

மாணவர்களை அருகிலுள்ள மேல்நிலைப்பள்ளியில் நடைபெறும் விதைத் திருவிழாவிற்கு அழைத்துச் செல்வதாகத் தலைமையாசிரியர் கூறினார்.

3. **'பாதிப்பு' என்று எழுதப்பட்ட அரங்கத்தில் என்ன செய்தி சொல்லப்பட்டது?**

'பாதிப்பு' என்று எழுதப்பட்ட அரங்கத்தில் இரசாயன விதைகள், இரசாயன பூச்சி மருந்துகள் பயன்படுத்துவதால் ஏற்படும் விளைவுகள் பற்றிய செய்தி சொல்லப்பட்டது.

4. **நவதானியங்களுள் ஐந்தின் பெயரை எழுதுக.**

நெல், துவரை, அவரை, எள், கடலை

## ஆ) சிந்தனை வினா

**செயற்கை உரங்கள், மண்ணின் வளத்தைக் கெடுக்கும் எனில், அதற்கு மாற்றாக நாம் என்ன செய்யலாம்?**

செயற்கை உரங்கள் மண்ணின் வளத்தைக் கெடுக்கும் எனில் அதற்கு மாற்றாக நாம் இயற்கை உரங்களைப் பயன்படுத்தலாம். நம் மண் வளத்தையும், இயற்கை வளத்தையும் பேணிக்காக்கும் பொருட்டு இயற்கை வேளாண்மையை மேற்கொள்வது காலத்தின் கட்டாயம் ஆகும். இயற்கை வேளாண்மையில் இரசாயன உரங்களின் பயன்பாட்டினைக் குறைத்து இயற்கை உரங்களைப் பயன்படுத்தி வேளாண் உற்பத்தியை அதிகப்படுத்தலாம்.